*[டாக்டர் வைகைச்செல்வன்]* [2012 நவம்பர் 2

*அரசின் முதலமைச்சர், எங்கள் நாடி நரம்பில், ஊனில், உணர்வில், உதிரத்தில் கலந்திட்ட உயரனையத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எளியவன், அடியவன், எம்பொருட்டும் அரசின் தலைமைக் கொறடாவாகவும், மனுக்கள் குழுவின் தலைவராகவும் பணியாற்றக்கூடிய உயர்ந்த சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய பாதங்களில் என் நன்றி மலர்களைக் காணிக்கை ஆக்குகிறேன். அம்மாவின் பாதங்களில் என் நன்றிக் கண்ணீரை நனைக்கின்றேன். அதைச் செந்நீரால் துடைக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் நடந்து செல்கிற பாதையில் கிடக்கின்ற மண்ணே எங்களுக்கு திருநீறு. அம்மா அவர்கள் கால் பதிக்கிற இடம்தான் எங்களுக்கு கைலாயம் என்று சொல்லி, அம்மாவை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவின் 2012-2013 ஆம் ஆண்டுக்கான 13 முதல் 15 வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

*பிற்பகல் 12-40*

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*“2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”*

*எனக் கோருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.*

*மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

## 7. கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012-2013 ஆம் ஆண்டின் கூடுதல் செலவிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதமும், பதிலுரையும் மற்றும் வாக்கெடுப்பும். துணை மானியக் கோரிக்கைகள் மீது விவாதம். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

**திரு. ச. இராமச்சந்திரன் :** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, எதிர்பாராத செலவுகள் ஏற்படுகிறபொழுது, துணை மானியக் கோரிக்கை தந்து அனுமதி பெறுவது இயற்கை. அந்தவகையில் முதல் துணை மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துகளைக் கூற விழைகிறேன்.*

*எதிர்பாராத செலவினங்கள் என்று சொல்கிறபொழுது, டீசல் விலை உயர்த்தப்பட்டதனால் போக்குவரத்துக் கழகங்களுக்கு 200 கோடி ரூபாய் கூடுதல் நிதி தரவேண்டியுள்ளது என்பது எதிர்பாராமல் ஏற்பட்ட செலவு. அதேபோல, இன்னும் தொழில்*